# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 16 வெள்ளிக்கிழமை 28.02.2025 கதிர் 139



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# யாழ். மற்றும் கிழக்குப் பல்கலைகளுக்குப் பேரவையை நியமிப்பதில் பெரும் இழுபறி!

## அரசியல் தலையீட்டினால் திணறும் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் பேரவைக்கு வெளிவாரி உறுப்பினர்களை நியமிப்பதில் அரசியல் அழுத்தம் காரணமாகப் பெரும் இழுபறி நிலை தோன்றி யிருப்பதாக அறியவருகிறது.

ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அர சாங்கம் ஆட்சிக்கு வந்த

பின்னர் - கடந்த 13ஆம் திகதியுடன் செயற்படும் வகையில் நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பதவியில் இருந்த வெளிவாரிப் பேரவை உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன கோரியிருந்தார்.

இதனையடுத்து, வவுனியாப் பல்கலைக்கழகம் தவிர்ந்த அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் பேரவைகள் செயற்பட முடியாமல் முடங்கிப் போயிருந்தன. பல்கலைக்கழகங்களின் நாளாந்த 7➤

# யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைக் காப்பாற்றுவது யார்?

## தொடர்கின்றது மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்




யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தமது தொழிற்சங்க நடவடிக்கையை இன்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால் இரண்டு நாட்களாக நோயாளர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்ற நிலையில், நோயாளர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று பலரும் கோரியுள்ளனர். 7➤

# ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக "சாந்தன் துயிலாலயம்" இன்று திறப்பு



யாழ்ப்பாணம், பெப். 28

"சாந்தன் துயிலாலயம்" சாந்தனின் தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். வடமராட்சி, எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில், இன்றைய தினம் வெள்ளிக்கிழமை, சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட இடத்தில், சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள "சாந்தன் துயிலாலயம்" தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கங்களாலும், அரசியலாலும், சட்டத்தாலும் , 7➤

# போர்க்குற்றவாளிகளைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தினால்தான் தமிழருக்கு நீதி கிடைக்கும்!

## கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, பெப். 28

தமிழின அழிப்புக்குக் காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப் படவேண்டியவர்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை 7➤

# புதைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி ஒன்று மீட்பு!



புதைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கண்டி – வத்துகாமம் வீதியில் நவயால தென்னை பகுதியில் 7➤

# செம்மணியில் மனித எலும்புத் துண்டுகளே மீட்பு!



## நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்ப்பாணம், செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மீட்கப்பட்டவற்றில் பெரும்பாலானவை மனித எலும்புத் துண்டுகள் என்று சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று முறைப்பாட்டாளர்களில் ஒருவரான கிருபாகரன் தெரிவித்தார்.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயா னத்தில் மின் தகன மேடை அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டும் போது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்டன.

அதனையடுத்து அத்திவாரம் வெட்டும் பணியை ஒப்பந்தக்காரர் நிறுத்தியிருந்தனர். இந்நிலையில், அந்தப் பகுதியில் மேலும் மனித எலும்புக்கூட்டு 7➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தமிழ் அரசியல் கைதிகள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள்- எம்.பி கேள்வி!

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெறும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தின் போது, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்சன நாணயக்காரவிடம் அவர் இந்த கேள்வியை எழுப்பினர்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழ் இளைஞர்கள் பலர் இலங்கை சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் குடும்பம் மிகவும் துயரத்துடன் வரவுக்காக காத்திருக்கின்றது. தாய், தந்தையின் அரவணைப்பு இல்லாமலும் பல பிள்ளைகள் தமது பெற்றோரின் விடுதலைக்காக காத்திருக்கின்றனர்.

தற்போது சிறைச்சாலைகளில் எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்கள் எந்தெந்த சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலித்த நீதியமைச்சர், இது ஒரு மிகவும் தீவிரமான பிரச்சினை எனவும் இதற்கான உரிய பதில்களை வழங்க ஒரு வார காலவகாசமும் கோரினார்.

## கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம்– நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட இரகசிய அறிக்கை!

கொழும்பு, பெப் 28

பாதாள உலகக் குழு தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பில் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவு இரகசிய அறிக்கை ஒன்றை கொழும்பு நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

கணேமுல்ல சஞ்சீவவின் கொலை சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப்பிரிவு விசாரணைகளை முன்னெடுத்துவந்திருந்த நிலையில், கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலியின் உத்தியோகபூர்வ அறையில் இது தொடர்புடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைவாக நீதிமன்றம் பொலிஸாருக்கு பல உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதன்படி, பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் குழுவிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட உள்ளன.

## ஊழல் மற்றும் மோசடி வழக்கு விசாரணைகளை நிறுத்திய நல்லாட்சி அரசாங்கம்- அமைச்சர் ஆனந்த விஜேபால தகவல்!

நூற்றுக்கணக்கான ஊழல் மற்றும் மோசடி வழக்குகள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது விசாரணைகளை மேற்கொள்ளாமல் நிறுத்திவிட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் போது இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சரத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளராக நான் பணியாற்றிய வேளையில், எமக்கு 1200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் 500 முறைப்பாடுகள் நிதி குற்ற புலனாய்வு பிரிவு மற்றும் குற்ற புலனாய்வு போன்றவற்றிற்கு அனுப்பின வைக்கப்பட்டன.

இருப்பினும், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சில அரசியல் ஒப்பந்தங்களில் ஈடுபட்ட பின்னர் இவற்றில் பலவற்றை நிறுத்தினர்.

ஆனால் புதிய அரசாங்கம் இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை மீதான விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

நிதி குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் மூலம் பல்வேறு நபர்கள் வருமானம் ஈட்டிய பில்லியன் கணக்கான ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் எமது அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்ட 4.5 பில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களும், நிதி குற்றங்கள் மூலம் ஈட்டப்பட்ட 1.05 பில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களும் இன்றுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை மின்சார சபைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு!

மின்சார இணைப்புகளை வழங்கும்போது அனைத்து நுகர்வோரிடமிருந்தும் வசூலிக்கப்படும் பாதுகாப்பு வைப்புத்தொகைக்கான வருடாந்த வட்டியை செலுத்துமாறு இலங்கை மின்சார சபைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட்) எல்ட்டிட
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448
சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை
Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday
Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்
இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்
Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy
அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்
Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)
Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina
Contact No-0762942218

# ஜனாதிபதி ஆணைகுழுக்களுக்கு ரூ.5301 இலட்சம் செலவு



கொழும்பு, பெப் 28

முந்தைய அரசாங்கங்களால் நியமிக்கப்பட்ட பதினான்கு ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கு 530 மில்லியன் ரூபாய்க்கும் (530.1 மில்லியன்) அதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக, ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இருப்பினும், கடந்த கால போராட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிறரின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை விசாரித்த ஜனாதிபதி ஆணையத்தின் அறிக்கை மட்டுமே இந்த 14 ஆணையங்களின் பரிந்துரைகளை செயல்படுத்தியுள்ளது என்றும், அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், 2024ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதிகளின் பராமரிப்புக்காக மட்டும் ரூ.110 மில்லியனுக்கும் அதிகமாக செலவிடப்பட்டதாகவும், ரணில் விக்ரமசிங்க மற்றும் கோட்டபய ராஜபக்ஷ காலத்தில் ஆறு ஆளும் கட்சி அமைப்பாளர்களுக்காக ரூ.370 மில்லியனுக்கும் அதிகமாக செலவிடப்பட்டதாகவும், ஜெயதிஸ்ஸ கூறினார். (ஐ)

# இன்று 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி



கொழும்பு, பெப் 28

நாட்டின் பல பகுதிகளில் இன்று 100 மில்லி மீற்றருக்கும் அதிகரித்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்திலும், மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, நுவரெலியா, பொலன்னறுவை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொள்ளையடித்த பொருட்கள் மீட்பு

கொழும்பு, பெப் 28

தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்ற இரண்டு சந்தேக நபர்கள் வெளிப்படுத்திய தகவல்களின்படி, களுத்துறை குற்றப்பிரிவு அதிகாரிகள், அவர்கள் திருடிய 9 மிமீ பிஸ்டல்களுக்கான 13 தோட்டாக்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு முச்சக்கர வண்டி மற்றும் 13 தோட்டாக்களை மீட்டுள்ளனர்.

குறித்த இரண்டு சந்தேக நபர்களும் கடந்த 23ஆம் திகதி வெலிபென்ன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் இருந்து 10 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 6 கிராம் 100 மில்லிகிராம் ஹெராயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் குறித்து களுத்துறை குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது (ஐ)

# எகிப்து தூதுவருடன் ஜனாதிபதி சந்திப்பு



கொழும்பு, பெப் 28

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் எகிப்து தூதுவர் ஆதில் இப்ராஹிம் அஹமட் இப்ராஹிம்ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பானது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கை மற்றும் எகிப்துக்கு இடையில் நீண்ட காலமாகக் காணப்படும் நட்புறவைப் பலப்படுத்துவது தொடர்பிலும் இருநாட்டுச் சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய கிழக்கு வலயத்தின் தற்போதைய நிலைமை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது (ஐ)

# டிஜிட்டல் திட்ட முதலீட்டுக்கு ஜப்பான் உடன்பாடு



கொழும்பு, பெப் 28

இலங்கையில் துறைமுகம் சார்ந்த திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு முதலீடு செய்ய ஜப்பானிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் இசொமதா அகியோவிற்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

ஜப்பானிய அரசாங்கம் அண்மையில் ஆரம்பித்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உதவித் திட்டத்தில் இலங்கையையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக இசொமதா ஆகியோ தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்தில் தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக ஜப்பான், சுவிட்சர்லாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா இணைந்து மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டதோடு, அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் தூதுவர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு தெளிவுபடுத்தினார்.

டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் விமான நிலைய முதலீடுகளின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது. என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# வெளிநாட்டுப் பயண செலவினங்களை வெளியிட்டார் பிரதமர்



*வரி செலுத்துவோர் மீது சுமை இல்லாமல் பொது சேவையை நடத்த முடியும் என்பதை அரசாங்கம் நிரூபித்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.*

*2010 முதல் 2024 வரை முன்னாள் ஜனாதிபதிகள் செய்த வெளிநாட்டு பயணச் செலவுகளை வெளிப்படுத்தும் போது அவர் இந்தக் கூற்றை வெளியிட்டார், வெவ்வேறு நிர்வாகங்களின் கீழ் செலவினங்களில் உள்ள கடுமையான வேறுபாட்டை சுட்டிக்காட்டினார்:*

*2010 – 2014 மஹிந்த ராஜபக்ஷ: ரூ. 3,572 மில்லியன்*

*2015 – 2019 மைத்திரிபால சிறிசேன: ரூ. 384 மில்லியன்*

*2020 – 2022 கோட்டாபய ராஜபக்ச: ரூ. 126 மில்லியன்*

*2023 – 2024 ரணில் விக்கிரமசிங்க: ரூ. 533 மில்லியன்*

*2024 செப் – 2025 பெப்ரவரி அனுர குமார திஸாநாயக்க: ரூ. 1.8 மில்லியன்*

*ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் நிர்வாகம் செலவினங்களைக் கணிசமாகக் குறைத்துள்ளதாகவும், ஐந்து மாதங்களில் வெளிநாட்டுப் பயணங்களுக்கு ரூ. 1.8 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமரசூரிய கூறினார்.*

*“நாங்கள் வெறும் வார்த்தைகளால் அல்ல, செயல்களால் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டோம். இங்கே, நாங்கள் அதைச் சரியாகச் செய்துள்ளோம்,” என்று பிரதமர் கூறினார்.*

*மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 2013 ஆம் ஆண்டு அதிகபட்ச வருடாந்திர செலவு பதிவாகியதாகவும், ஒரே ஆண்டில் ரூ. 1,144 மில்லியன் செலவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*(ஐ)*



## புனே பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு சந்திரசூட் கண்டனம்

புனேயில் பஸ்சில் பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்திற்கு, சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி சந்திரசூட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

புனேயில் 26 வயதான பெண் ஒருவர் பொலிஸ் ஸ்டேசன் அருகே பஸ் ஒன்றில், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக, சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி சந்திரசூட் கூறியதாவது:

பெண்களுக்கு எதிரான குற்றங்களை சட்டங்கள் உருவாக்குவதன் மூலம் மட்டும் தடுக்க முடியாது. பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களைத் தடுக்க பெண்களுக்காக இயற்றப்பட்ட சட்டங்களை முறையாக அமல்படுத்துவது அவசியம்.

நிர்பயா சம்பவத்தை தொடர்ந்து சட்டங்களில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட்டன. ஏராளமான பெண்கள் வேலைக்கு செல்கிறார்கள். அவர்களுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் முறையாக செயல்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் பெண்கள் பாதுகாப்பாக உணரப்படுவார்கள். சரியான விசாரணை, வலுவான நடவடிக்கை, விரைவான தண்டனை ஆகியவை அவசியம்.

இது நீதிமன்றம் மற்றும் பொலிஸாரின் மிகப் பெரிய பொறுப்பு. ஒவ்வொரு சூழ்நிலையிலும், பெண்கள் தங்கள் வேலைகளை பாதுகாப்பாகச் செய்ய நாம் இதைப் பற்றி கவனமாக சிந்திக்க வேண்டும். இதுதான் ஒரு சமமான சமூகத்தின் அடிப்படை. இவ்வாறு சந்திரசூட் கூறினார்.

புனேயில் 26 வயதான பெண் ஒருவர் பொலிஸ் ஸ்டேசன் அருகே பஸ் ஒன்றில், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது குறித்து பொலிஸார் விசாரித்தனர். குற்றம் சாட்டப்பட்ட தத்தாத்ரே ராம்தாஸ் காடே, ஷிரூரில் ஒரு பண்ணையில் பதுங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டான். (ஐ)

# முதல்வர் நிதீஷ் இதை செய்தால் அரசியலைக் கைவிடுகிறேன்

## பிரசாந்த் கிஷோர் சவால்



'அமைச்சர்களின் பெயர்களை காகிதத்தைப் பார்க்காமல், முதல்வர் நிதீஷ் குமார் படித்தால் நான் அரசியலைக் கைவிட்டு அவருக்காக வேலை செய்யத் தொடங்குவேன்' என ஜன் சுராஜ் கட்சி தலைவரும், தேர்தல் வியூக வகுப்பாளருமான பிரசாந்த் கிஷோர் சவால் விடுத்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில், பிரசாந்த் கிஷோர் கூறியதாவது: வரும் சட்டசபை தேர்தலில் எங்கள் கட்சி பெரும் வெற்றி பெறும். ஏப்ரல் 11ம் தேதி ஒரு பிரம்மாண்ட பேரணி நடத்த திட்டமிட்டுள்ளோம். பேரணியை நடத்த அனுமதி கேட்டு பாட்னா மாவட்ட நிர்வாகத்திற்கு நாங்கள் கடிதம் எழுதியுள்ளோம்.

உடல் ரீதியாக சோர்வடைந்து மன ரீதியாக ஓய்வு பெற்ற முதல்வரை (நிதீஷ் குமார்) அகற்றுவோம். சட்டசபை தேர்தலில் ஐக்கிய ஜனதா தளம் கட்சி ஒரு இடத்தைக் கூட வெல்லக் கூடாது. கூட்டணிகளை மாற்றிக் கொண்டே நிதிஷ் குமார் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இதன் மூலம் ஐக்கிய ஜனதா தளம் கட்சி குறைந்த எண்ணிக்கையிலான இடங்களில் வெற்றி பெற்றாலும் அவர் முதல்வராக இருக்க முடிகிறது.

அம்பு (ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தேர்தல் சின்னம்) தாமரையுடன் (பா.ஜ.,) மிதக்கவோ அல்லது விளக்குடன் (ராஷ்டிரா ஜனதா தளம்) பிரகாசமாக எரியவோ கூடாது என்பதை உறுதி செய்யவும், நிதீஷ் குமார் கட்சி ஒரு இடத்தைக் கூட வெல்லாத வகையில் ஓட்டளிக்குமாறு மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணத்தைக் கொள்ளையடிப்பதும், சில பிரிந்த சாதிகளை சமாதானப்படுத்துவதற்கு தான் தேர்தலுக்கு ஆறு மாதங்கள் மட்டுமே உள்ள நிலையில் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நிஷாந்த் (நிதீஷ் குமார் மகன்) பொது வாழ்வில் இல்லாததால் அவரைப் பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. ஆனால், மாநில அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் பெயர்களை ஒரு துண்டு காகிதத்தைப் பார்க்காமல் படிக்குமாறு அவரது தந்தையிடம் நான் சவால் விடுகிறேன். இவ்வாறு நிதிஷ் குமார் தனது மன உறுதியைக் காட்டினால், நான் அரசியலைக் கைவிட்டு அவருக்காக வேலை செய்யத் தொடங்குவேன். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# கின்னஸ் புத்தகத்தில் மஹா கும்பமேளா புதிய சாதனைகள்!

ஒற்றுமை, சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் 80 அடி நீளம், 5 அடி அகல துணியில் 10,000 பேர் பங்கேற்று கையால் வரைந்த ஓவியம் 15,000 தூய்மை பணியாளர்கள் இணைந்து ஒரே நேரத்தில் விழா நடந்த இடத்தில் தூய்மை பணி மேற்கொண்டது உள்ளிட்ட புதிய சாதனைகள் கின்னஸ் அமைப்பால் உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டன.

இதற்கான சான்றிதழை முதல்வரிடம் கின்னஸ் அமைப்பினர் வழங்கினர். இதற்கு முன் 10,000 பேர் ஒரே நேரத்தில் தூய்மை பணி மேற்கொண்டதே சாதனையாக இருந்தது.

நம்பிக்கை, ஒற்றுமை, சமத்துவத்தின் மிகப்பெரும் திருவிழாவான மஹா கும்பமேளா சிறப்பான முறையில் நடந்து முடிந்துள்ளது.

இதில், 66.21 கோடி பேர் பங்கேற்று புனித நீராடினர். பிரதமர் மோடி தலைமையின் கீழ் நடந்த இந்தத் திருவிழா, உலக வரலாற்றில் இதுவரை நடக்காத ஒன்று மறக்க முடியாத ஒன்று. (ஐ)




## நீச்சலில் சாதித்த மாற்றுத்திறனாளி: சரத் கெய்க்வாட்

*நல்ல உடல்வாகு கொண்ட மனிதர்களை விட, மாற்றுத்திறனாளிகளுக்கு வாழ்வில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். இந்த உலகம் நம்மை திரும்பி பார்க்க வேண்டும் என்று நினைப்பர். இதற்காக எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் தாங்கிக்கொள்வர். இதனால், பல துறைகளில் மாற்றுத்திறனாளிகள் சாதித்தது ஏராளம்.*

*அதுபோல விளையாட்டிலும் பலர் தங்கள் திறமையை வெளிக்காட்டி உள்ளனர். அவர்களில் ஒருவரை பற்றி பார்ப்போம்.*

*பெங்களூரின் பசவனகுடி விஸ்வேசபுராவை சேர்ந்தவர் சரத் கெய்க்வாட், 33. இவர், 1991ம் ஆண்டு பிறந்தார். பிறக்கும்போதே இடது கை ஊனத்துடன் பிறந்தார். பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும் போது, சக மாணவர்களுடன் நீச்சல் வகுப்பிற்கு செல்ல ஆசைப்பட்டார். ஆனால் அவரது இயலாமை காரணமாக பெற்றோர் முதலில் பயந்தனர்.*

*பெற்றோரிடம் எடுத்துக் கூறி ஒருவழியாக சம்மதம் வாங்கினார். நீச்சல் பயிற்சியில் சிறப்பாக செயல்பட்டார். இதனால் பள்ளி அளவிலான மாற்றுத்திறனாளிகள் நீச்சல் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. கடந்த 2003 ம் ஆண்டு நீச்சல் பயிற்சியாளரான ஜான் கிறிஸ்டோபர், ஒரு போட்டியில் சரத்தின் திறமையை கண்டு வியந்தார். பின், அவருக்கு பயிற்சி அளிக்க ஆரம்பித்தார்.*

*கடந்த 2008 முதல் தேசிய மற்றும் சர்வதேச நீச்சல் போட்டிகளில் இந்தியாவிற்காக நீச்சல் அடித்தார். அந்த ஆண்டில் மட்டும் நான்கு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலம் வென்று சாதனை படைத்தார். கடந்த 2010 ம் ஆண்டு சீனாவின் குவாங்சோவில் நடந்த, ஆசிய பாரா விளையாட்டு போட்டியில் 100 மீட்டர் துார போட்டியில் இலக்கை, ஒரு நிமிடம் 20 வினாடிகளில் கடந்து அசத்தினார்.*

*இந்த செயல்திறன் கடந்த 2012ல் நடந்த லண்டன் பாரா ஒலிம்பிக்கில் இடம் பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது. அந்த ஆண்டு, பாரா ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற ஒரே நபர் இவர்தான். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் நீச்சலில் பல சாதனை படைத்தார். கடந்த 2014 ல் தோள்பட்டையில் காயம் அடைந்த சரத்துக்கு, அதில் இருந்து மீண்டு வருவது பெரிய சவாலாக இருந்தது. இதனால் நீச்சல் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். போட்டிகளில் பங்கேற்று 30 க்கும் மேற்பட்ட சர்வதேச மற்றும் 40 க்கும் மேற்பட்ட, தேசிய பதக்கம் வென்று உள்ளார். ஓய்வுக்குப் பின், பல நீச்சல் கிளப்புகளில் பயிற்சியாளராக இருந்தார். தற் போது பெங்களூரு ஜீ நீச்சல் அகாடமி கிளப் திட்ட இயக்குநராக உள்ளார். (ஐ)*

# தொடு வானம்!



**நா**ம் எல்லோரும் சின்ன வயதில் எதிர் நோக்கிய ஒரு கேள்வி, நீ என்னவாக போகிறாய்? கண்கள் மின்ன நாம் ஒரு பதில் சொல்லியிருப்போம். இன்றைக்கு அந்த நிலையில் இருக்கிறோமா என்று யோசித்தால் சிலர் ஆமென்றும், வெகு சிலர் அதைவிட நல்ல நிலையிலும், பலர் அதற்கு சம்பந்தமில்லாத இடத்திலும் இருப்பர்.

அதிலும் நாற்பதைக் கடந்த பல பெண்களுக்குத் தினசரி வேலைகளைத் தாண்டி வாழ்க்கை என்று ஒன்று இருப்பதே மறந்திருக்கும். அதெப்படி ஒரு சிலர் மட்டும் இலட்சியத்தை அடைந்ததும், சிலர் அதையும் தாண்டி சாதித்ததும் சாத்தியமானது ?

அவர்கள் எத்தனை தூரம் அந்த இலட்சியத்தை நேசித்தார்கள் என்பதைப் பொருத்தே வெற்றி அமைகிறது.

‘மனம் நினைத்தால் அதை தினம் நினைத்தால் நெஞ்சம் நினைத்ததை முடிக்கலாம்’ என்று ஏழாம் அறிவு திரைப்படத்தில் வரும் அற்புதமான பாடல்.

நம் இலட்சியத்தை மனதில் இருத்தி தினமும் அதை நோக்கி நகரும் போது, ஒரு நாள் அதை அடைந்தே தீருவோம், சில நேரம் அதையும் தாண்டி வெற்றி அடைவதும் உண்டு.

உங்களின் தனிப்பட்ட லட்சியம் என்ன ? ஓராண்டுக்குப் பிறகு நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்? இந்தக் கேள்விக்குத் தெளிவான பதில் இருந்தால் அதில் உறுதி இருந்தால் உங்கள் வெற்றியை யாருமே தடுக்க முடியாது. ஆனால், நம்மில் நிறைய பேருக்கு அப்படி ஓர் இலக்கே இல்லை என்பதே வருத்தமான விஷயம்.

இலட்சியமே இல்லாத வாழ்க்கையில் சிலிர்ப்போ நெகிழ்ச்சியோ உற்சாகமோ இருப்பதில்லை.

கடனே என்று ஒரு வாழ்க்கையில் சிக்கிக் கொள்கிறோம்.

இலக்கில்லாமல் போகும் வண்டி வீடு போய்ச் சேர்வதில்லை. எந்த வேலையிலும் ஈடுபாடு குறைந்து, ‘என்ன இப்போ, அப்புறம் பார்த்துக்கலாம்’ என்கிற சோம்பேறித்தனமான மனநிலைக்கு வந்துவிடுவோம்.

நீங்கள் ஒரு சிறிய குறிக்கோளை முயற்சி செய்து பார்க்கலாம். அதை வென்றெடுக்கும் போது வரும் சிலிர்ப்பு (Thrill) அலாதியானது.

ஒரு இலட்சியத்திற்காக நாம் வேலை செய்ய ஆரம்பிக்கும் போது அது நம் வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வரும். அந்த நேர்மறை மாற்றங்களே உற்சாகத்தையும் தன்னம்பிக் கையையும் பல மடங்கு அதிகப்படுத்துகிறது. எல்லாவற்றையும் தாண்டி வாழ்க்கைக்கு அர்த்தம் கிடைக்கிறது, வாழ்வில் எது போனாலும் இலட்சியப் பிடிமானம் இருந்துவிட்டால் வாழ்வு அழகாகிறது.

இலட்சியம் என்பது ஏதோ விண்ணை வளைப்பது போன்ற பெரிய காரியம் என்றில்லை. அது எவ்வளவு சிறியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். அது எடை குறைப்பு, புது மொழி கற்றல் என அன்றாட வாழ்வோடு பிணைந்ததாகவும் இருக்கலாம் அல்லது பட்டம் வாங்குவது, 5 இலக்க எண்ணில் சம்பாதிப்பது, உங்களுக்குப் பிடித்த துறையில் முன்னேறுவது என எதிர்காலத்தின் திட்டமாகவும் இருக்கலாம்.

உங்களை நீங்களே உற்று நோக்கி, உங்களை அறிந்து கொள்வதின் மூலம் உங்களுக்கான இலட்சியத்தை முடிவு செய்யலாம்.

இதில் கவனிக்கவேண்டிய விஷயம் உங்களின் லட்சியத்தை நீங்களே தீர்மானிப்பது. நமக்காகப் போராடி வெற்றி கொள்ளும்போதுதான் வெற்றியின் சுவை அதிகமாகும்.

சரி, நம்மை நாமே அறிந்துகொள்வதில் நமது கனவு என்ன என்று புரியும். அதை அடைவதற்குத் திட்டமிடுவது எப்படி?

முதலில் ஏன் அந்த இலக்கைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான் நிஜமாகவே அது தேவையானதுதானா என்கிற தெளிவிருக்கும்.

உங்கள் இலக்கை அடைய தேவையான தகுதிகள் என்ன, அது உங்களிடம் உண்டா, இல்லையெனில் அதை எப்படி வளர்த்துக்கொள்வது என்பதைத் திட்டமிடுங்கள்.

இந்த இலக்கை அடைய, உங்களின் பலம், பலவீனம், வாய்ப்புகள், சவால்கள் போன்றவற்றை ஆராயுங்கள். உங்கள் பாதையை நிர்ணயிக்க இந்த ஆய்வு உதவும்.

இலட்சியத்தை பல சிறு சிறு குறிக்கோளாகப் பிரித்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு சிறு குறிக் கோளுக்கும் நியாயமான காலக் கெடு முடிவு செய்யுங்கள்.

திட்டமிட்ட காலத்திற்குள் அதைச் செய்து முடிக்க தெளிவான திட்டம் தீட்டுங்கள். ஒரு நாளில் எவ்வளவு நேரம் செலவிட வேண்டும், எப்படிச் செலவிட வேண்டும் என்கிற வரைபடம் முக்கியம்.

குறிப்பிட்ட கெடுவுக்குள் அந்தப் பகுதியை முடிக்க என்ன செய்ய வேண்டுமோ அதை மட்டுமே செய்யுங்கள். இது ஒரு செயலை ஒருமுகபட்ட மனதோடு செய்து முடிக்கும் திறனை வளர்க்கும். கவனச் சிதறல்களைக் கட்டுக்குள் கொண்டு வர உதவும்.

அவ்வப்போது உங்கள் முன்னேற்றத்தை அள விடுங்கள், அது உங்களை ஊக்கப்படுத்தும். ஒரு வேளை நீங்கள் பாதை மாறி இருந்தால் மறுபடியும் சரியான பாதைக்கு வர இந்த அளவீடு உதவும்.

8. அவ்வப்போது உங்கள் இலக்கையும் சரி பாருங்கள். நீங்கள் முன்னரே முடிவு செய்த இலக்கு தவறென்றால் அதைத் திருத்திக் கொள்ள உதவும்.

இலக்கை நிர்ணயிக்கும் போது நாம் செய்யும் பொதுவான சில தவறுகள், நம் இலக்கைத் தொட்டு விடும் தூரத்தில் இருந்து துரத்திவிடும்.

ஆர்வ மிகுதியில் சில நேரம் நாம் யதார்த்தத்தை மீறிய இலக்கை நிர்ணயிக்கலாம்.

இலக்கை மற்றவர்களின் கருத்தின் அடிப்ப டையில் முடிவு செய்வது.

ஒரே நேரத்தில் பல இலக்கினை நோக்கி நகர்ந்து நமக்கு நாமே அழுத்தம் தருவது.

இது போன்ற தவறுகளைத் தவிர்த்தால், ‘தொடு வானம் அது தொடும் தூரம்’ என்று ஜெயிக்கலாம், ஜொலிக்கலாம்.

வாருங்கள், உங்கள் கனவுகளைக் கனவாகவே மடிந்து விடாமல் அதற்குச் செயல் வடிவம் தருவோம்.

உலகின் மிக சிறந்த சொல், ‘செயல்’.

‘மனம் நினைத்தால் அதை தினம் நினைத்தால் நெஞ்சம் நினைத்ததை முடிக்கலாம்’ என்று ஏழாம் அறிவு திரைப்படத்தில் வரும் அற்புதமான பாடல். நம் இலட்சியத்தை மனதில் இருத்தி தினமும் அதை நோக்கி நகரும் போது, ஒரு நாள் அதை அடைந்தே தீருவோம், சில நேரம் அதையும் தாண்டி வெற்றி அடைவதும் உண்டு. உங்களின் தனிப்பட்ட லட்சியம் என்ன ? ஓராண்டுக்குப் பிறகு நீங்கள் என்னவாக விரும்புகி றீர்கள்? இந்தக் கேள் விக்குத் தெளிவான பதில் இருந்தால் அதில் உறுதி இருந்தால் உங்கள் வெற்றியை யாருமே தடுக்க முடியாது. ஆனால், நம்மில் நிறைய பேருக்கு அப்படி ஓர் இலக்கே இல்லை என்பதே வருத்தமான விஷயம்.

# அரசியல்வாதிகள் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் ஊழலை ஒழிக்க வேண்டும்—எலான் மஸ்க் ‘ஐடியா’



நாட்டில் ஊழலை ஒழிக்க அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என, அமெரிக்காவைச் சேர்ந்த தொழிலதிபர் எலான் மஸ்க் கூறியுள்ளார்.

நிறையகொலைமிரட்டல்கள் வருகிறது டிரம்பிடம் எலான் மஸ்க் வருத்தம்

அமெரிக்காவில் சிறந்த நிர்வாகத்துக்கான துறை தலைவராக, பிரபல தொழிலதிபருமான எலான் மஸ்க் நியமிக்கப்பட்டு உள்ளார். அரசின் செலவை குறைக்க அவர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். வெளி நாடுகளுக்கு வழங்கப்பட்டு வந்த உதவியை நிறுத்தி உள்ளார்.

இந்நிலையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: ஊழலை ஒழிப்பதற்காக, பார்லிமென்ட் உறுப்பினர்கள் மற்றும் மூத்த அரசு அதிகாரிகளுக்கான சம்பளத்தை அதிகரிக்க வேண்டும். அரசு அதிகாரிகளால் பொது மக்களுக்கு ஆயிரம்மடங்கு செலவாகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் எலான் மஸ்க் கூறியுள்ளார்.

(ஐ)

# இஸ்ரேலில் பயங்கரவாத தாக்குதல் காரை மோதச் செய்து நாசவேலை



இஸ்ரேலில் சாலையில் சென்றவர்கள் மீது வாகனம் மோதியதில் ஏழு பேர் காயமடைந்த நிலையில், இது பயங்கரவாதிகளின் நாசவேலையோ என, பாதுகாப்பு துறை சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

மேற்காசிய நாடான இஸ்ரேலின் வடக்கு பகுதியில் ஹைபா நகர் அமைந்துள்ளது. இங்குள்ள கர்கூர் சந்திப்பில் சாலையோரம் நேற்று நடந்து சென்ற நபர்கள் மீது வாகனம் மோதியது. இதில், பாதசாரிகள் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

அப்போது, அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், மேற்கொண்டு வாகனம்செல்ல விடாமல் தடுப்புகளை போட்டு தடுத்தனர். வாகனத்தை ஓட்டி வந்த நபரை கைது செய்தனர்.

காயமடைந்த ஏழு பேரும் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில், ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

பலத்த பாதுகாப்பு நிறைந்த பகுதியில், எங்கிருந்தோ வந்த வாகனம்ஒன்று, நடந்து சென்ற பாதசாரிகள் மீது திடீரென மோதியது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இது திட்டமிட்ட சதியாக இருக்குமோ என கூறப்படும் நிலையில், இந்த சம்பவம் பயங்கரவாத தாக்குதலாக இருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணையை முடுக்கியுள்ளனர். இதற்கிடையே, கைது செய்யப்பட்ட நபர், பாலஸ் தீனத்தைச் சேர்ந்த ஜெனின், 53, என்பதும், இஸ்ரேலில் அவர் வசித்து வந்ததும் விசாரணையில் தெரியவந்தது. இஸ்ரேல் பெண்ணை திருமணம் செய்த அவர், சட்டவிரோதமாக இஸ்ரேலில் வசித்ததாக கூறப்படுகிறது. இவருக்கும், பயங்கரவாத அமைப்புக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் பொலிஸார் விசாரிக்கின்றனர்.

(ஐ)



# விண்வெளிக்கு செல்கிறார் பிரபல பாப் பாடகி கேட்டி பெர்ரி!

பிரபல பாப் பாடகி கேட்டி பெர்ரி ப்ளூ ஆரிஜினின் வரவிருக்கும் என்.எஸ்.31 திட்டத்தில் இணைந்து சாதனை படைக்க உள்ளார். இந்த திட்டத்தில் நியூ ஷெப்பர்ட் விண்கலத்தில், 2 பத்திரிகையாளர்களுடன் பிரபல பாப் பாடகி கேட்டி பெர்ரி விண்வெளிக்கு செல்கிறார்.

2025ம் ஆண்டின் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லை குறிக்கிறது. 1963ம் ஆண்டு வாலண்டினா தெரஷ்கோவுக்குப் பிறகு முதல் பெண் விண்வெளி வீரர் குழு விண்வெளிக்கு பயணம் மேற்கொள்ள இருக்கிறது. இது குறித்து அதிக ரசிகர்களை கவர்ந்துள்ள பிரபல பாடகி பெர்ரி கூறியதாவது:

எனது விண்வெளி பயணம், என் மகளையும் மற்றவர்களையும் குறிப்பிட்ட இலக்கை அடைய ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார். இந்த பணிக்கு முன்னாள் பத்திரிகையாளர் லாரன் சான்செஸ் தலைமை தாங்குவார். அவர் இந்த பெண் விண்வெளி வீரர்கள் குழுவை உருவாக்க முக்கிய பங்கு வகித்தார்.

பாடகி கேட்டி பெர்ரி கலிபோர்னியாவில் அக்டோபர் 25ம் தேதி 1984ம் ஆண்டு பிறந்தார்.

2007ம் ஆண்டில் பெர்ரி பாடிய “யு ஆர் சோ கே” வலைத்தளங்களில் பெரிதும் பேசப்பட்டது.

2008ம் ஆண்டில் இவர் “ஐ கிஸ்டு எ கேர்ள்” என்ற பாடலை பாடி, பிரபல பாடகியாக முன்னேற்றம் பெற்றார்.

தற்போது, கேட்டி பெர்ரியின் பாடலை கேட்க ரசிகர்கள் வட்டாரங்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# என்.ஜி.ஓ., வாயிலாக வெளிநாடுகளுக்கு நிதி ரூ.5.22 லட்சம் கோடியை ரத்து செய்தார் டிரம்ப்

வெளிநாடுகளுக்கு தொண்டு நிறுவனங்கள் வாயிலாக வழங்கி வந்த 5.22 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நிதி உதவியை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அதிரடியாக ரத்து செய்து உள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்ற பின், அரசின் தேவையற்ற செலவுகளை குறைப்பது குறித்து பரிந்துரை வழங்குவதற்காக, அரசு சாரா துறை ஒன்றை உருவாக்கி, அதன் தலைவராக தொழிலதிபர் எலான் மஸ்கை நியமித்தார்.

அவரது பரிந்துரைப்படி, வெளிநாடுகளுக்கு வழங்கும் நிதி உதவிகளை அதிபர் டிரம்ப் அடுத்தடுத்து ரத்து செய்து வருகிறார். இந்நிலையில், என்.ஜி.ஓ., எனப்படும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் வாயிலாக, வெளிநாடுகளுக்கு வழங்கி வந்த பெரும்பாலான நிதி உதவிகளை டிரம்ப் ரத்து செய்துள்ளார்.

இது தொடர்பாக, 92 சதவீத யு.எஸ்.ஏ.ஐ.டி., ஒப்பந்தங்களை, ரே உத்தரவில் டிரம்ப் ரத்து செய்துள்ளார். நீதிமன்றங்களில் சில தொண்டு நிறுவனங்கள் தொடர்ந்துள்ள வழக்குகளால், மீதமுள்ள 8 சதவீத ஒப்பந்தங்கள் விட்டு வைக்கப்பட்டுள்ளன. டிரம்ப் பிறப்பித்துள்ள உத்தரவுப்படி, மொத்தம் 5.22 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நிதியுதவி நிறுத்தப்படுகிறது. இதில், யு.எஸ்.ஏ.ஐ.டி.,யின் கீழ் தொண்டு நிறுவனங்களின் 6,200 ஒப்பந்தங்கள் வாயிலாக வழங்கப்பட்ட 4.70 லட்சம் கோடி ரூபாயும் அடங்கும்.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘அமெரிக்க மக்களின் வரிப்பணம் தேவையின்றி வெளிநாடுகளுக்கு செல்வதை தடுக்கவும், அந்த பணத்தை எந்த வழியிலாவது அமெரிக்காவுக்கு பயன்படுத்தவும் இந்த முடிவு எடுக்கப்பட்டது. நீண்ட காலமாக வழங்கி வந்த வெளிநாட்டு உதவிகளை மறு சீரமைப்பு செய்யவும் தீர்மானிக்கப்பட்டு உள்ளது. ‘அமெரிக்கா செலவழிக்கும் ஒவ்வொரு டாலர் பணமும், அமெரிக்காவுக்கு பாதுகாப்பானதா? அமெரிக்காவை வலுப்படுத்துமா? அமெரிக்காவை மேலும் வளமாக்குமா? என்ற மூன்று கேள்விகளுக்கான பதில்களை நியாயப்படுத்துவதாக இருக்க வேண்டும்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் இந்த முடிவால், உலகளாவிய தொண்டு நிறுவனங்கள், அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் சர்வதேச நிறுவனங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

(ஐ)

## யாழ். மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்கள் இரண்டு தடவைகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அதன் பின்னரும் கூடப் பட்டியலை வெளியிட முடியாத நிலை காணப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் உள்வாரிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஒரு உறுப்பினர் அதிகமான எண்ணிக்கைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படுவது வழமையாகும். பல்கலைக்கழகப் பேரவை ஒன்றின் வெளிவாரி உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது முகாமைத்துவத்தில் மீயுயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற அடிப்படைத் தகுதியுடன், பால்நிலை சமத்துவம், சமய ரீதியான பிரதிநிதித்துவத்துடன், சமூக நலன் சார்ந்த உயர் சிந்தனையுடைய நபர்களையே வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்ற வரையறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வரையறுக்கப்பட்டிருக்கின்ற போதிலும், ஆட்சியதிகாரத்திலுள்ள கட்சிகளின் சிபார்சின் அடிப்படையிலேயே இதுவரை காலமும் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்கள் நியமனம் இடம்பெற்று வந்துள்ளமையும், யாழ்பாணத்தில் மிக நீண்டகாலமாக அமைச்சர் ஒருவரின் செல்வாக்கில் நியமனங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## யாழ். மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் தவிர, நேர்முகத் தேர்வுகள், நியமனங்கள், திட்ட அங்கீகாரங்கள் உட்பட எந்தவொரு தீர்மானங்களும் இயற்றப்பட முடியாத நிலை ஏற்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி தென்.கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான வெளிவாரிப் பேரவை உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருந்தனர். சமகாலத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் பேரவைகளுக்கும் உறுப்பினர்களை நியமித்து அறிவிப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாராக இருந்த போதிலும், வழமை போன்று - முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் நடைபெற்றது போல, கடைசி நேர அரசியல் அழுத்தம் காரணமாக பேரவை உறுப்பினர் நியமனம் பிற்போடப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்கள் இரண்டு தடவைகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அதன் பின்னரும் கூடப் பட்டியலை வெளியிட முடியாத நிலை காணப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் உள்வாரிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஒரு உறுப்பினர் அதிகமான எண்ணிக்கைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படுவது வழமையாகும். பல்கலைக்கழகப் பேரவை ஒன்றின் வெளிவாரி உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது முகாமை த்துவத்தில் மீயுயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற அடிப்படைத் தகுதியுடன், பால்நிலை சமத்துவம், சமய ரீதியான பிரதிநிதித்துவத்துடன், சமூக நலன் சார்ந்த உயர் சிந்தனையுடைய நபர்களையே வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்ற வரையறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டிருக்கின்ற போதிலும், ஆட்சியதிகாரத்திலுள்ள கட்சிகளின் சிபார்சின் அடிப்படையிலேயே இதுவரை காலமும் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்கள் நியமனம் இடம்பெற்று வந்துள்ளமையும், யாழ்பாணத்தில் மிக நீண்டகாலமாக அமைச்சர் ஒருவரின் செல்வாக்கில் நியமனங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## யாழ். போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பித்துள்ளனர்.

அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை இடைநிறுத்தி நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற சங்க நடவடிக்கை இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றது.

இதனால் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர். அவர்கள் உரிய சிகிச்சைகளைப் பெற முடியாது பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறு வைத்தியர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்ற தொழிற்சங்க நடவடிக்கையால் நோயாளர்கள் பெரும் ஆபத்தையும் எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, நோயாளர்களின் நலனைக் கருத்தில் கெண்டு அவர்களைப் பாதிக்காத வகையில் வைத்தியர்கள் செயற்பட வேண்டும் என்று கேட்டுள்ள நோயாளர்கள், தமக்கான சிகிச்சைகளை நிறுத்தாது வழமை போன்று வழங்குவதற்கு வைத்தியர்கள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான நிலைமையில், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் வைத்தியசாலையின் நிர்வாகத்தினருக்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையில் தொடர்ந்தும் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன என்றும், இன்று இரவுக்குள் உரிய தீர்வுகள் எட்டப்படலாம் என்றும் தெரியவருகின்றது

## யாழ். போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சங்கள் இருக்கலாம் என்றும், அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அரியாலை பகுதியைச் சேர்ந்த இருவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் குறித்த விடயத்தை யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றதை அடுத்து சம்பவ இடத்துக்கு கடந்த வாரம் நீதிவான் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அதன்போது, சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸார், தடயவியல் பொலிஸார், நல்லூர் பிரதேச செயலர் ஆகியோரும் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

அந்தப் பகுதிகளை ஆராய்ந்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நீதிவான், மீட்கப்பட்ட எலும்புத் துண்டுகளைப் பகுபாய்வுக்கு அனுப்புமாறும், ஏனைய பகுதிகளை ஸ்கானர் இயந்திர உதவியுடன் முழுமையாகப் பரிசோதனை செய்யவும் நீதிவான் கட்டளையிட்டிருந்தார்.

அந்நிலையில் குறித்த வழக்கு இன்று வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்ட வைத்திய அதிகாரியால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் , மீட்கப்பட்ட எலும்புத் துண்டு மாதிரிகள் பெரும்பலானவை மனித எலும்புத் துண்டுகள் என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து நீதிவான் எதிர்வரும் 4ஆம் திகதி மன்றில் கலந்துரையாடலை மேற்கொண்டு, காலநிலையையும் கருத்தில்கொண்டு ஸ்கானிங் மூலம் அந்தப் பகுதிகளை ஆய்வு செய்யும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் எனக் கூறினார் என எலும்புத் துண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த கிருபாகரன் என்பவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

## ஒரு தாயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக இந்த நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் குடும்பத்தினர் தெரிவித்தனர்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் கடந்த 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார்.

அவரது விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் 33 வருடங்களாக போராடி வந்தனர்.

சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவரை , மீள இலங்கைக்கு அழைத்து வர குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருட காலமாக போராடினார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் பலரும் பாராமுகமாகச் செயற்பட்ட நிலையில் , இலங்கை ஜனாதிபதி , பிரதமர் முதல் இந்திய அரசியல் தலைவர்கள் முதல் சாந்தனின் விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் மன்றாடி வந்த நிலையில், எவரும் கண்டுகொள்ளாத நிலையில் , அவரது உயிரற்ற உடலையே இலங்கை கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## புதைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகாவலி கங்கைக்கும் பிரதான பாதைக்கும் இடையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியே கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் இன்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்தத் கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் தயாரிக்கப்பட்ட 8 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கியே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கைத்துப்பாக்கி ஏதேனும் ஒரு குற்றச்செயலுக்காக இந்த இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இதற்குக் காரணமான வர்களைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் மாத்திரமே தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும் என்று நேற்றைய நாடாளுமன்ற அமர் வில் அவர் வலியுறுத்தினார்.

இதற்குக் காரணமானவர்கள் தற்போது சமூகத்தில் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்றும் குறிப்பிட்டார். சிறந்ததொரு அரச மைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எல்லை நிர்ணயத்தில் பாகு பாடு காட்டப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பொலிஸ் அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு- அமைச்சர் வழங்கிய தகவல்!

கொழும்பு, பெப் 28

பொலிஸ் திணைக்கள அதிகாரிகளுக்கு தனியான சம்பள கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்காக தற்போது திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

இன்றைய நாடாளுமன்ற அமர் வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல வருடங்களுக்குப் பின்னர் அடிப்படை சம்பளத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்,

தற்போது ஒரு பொலிஸ் கான்ஸ் டபிளின் அடிப்படை சம்பளம் 29,540 ரூபாய் ஆகும்.

இது இந்த வருடம் 44,293 ஆக உயரும். இது இந்த வருடம் 6,182 ரூபாயால் உயர்கிறது.

ஒரு பொலிஸ் சார்ஜன்ட்டுக்கு 6,441.54 ரூபாய், ஒரு SI-க்கு 6,551.72 ரூபாய், ஒரு I-க்கு 7,040.24 ரூபாய், ஒரு CI-க்கு 7,655.74 ரூபாய், ஒரு AS-க்கு 8,244.11 ரூபாய், SP-SS-க்கு 9,925 ரூபாய், னுஐபு, சீனியர் DIG-க்கு 11,118 ரூபாய், IGP-க்கு 13,223 ரூபாய் என இந்த வருடம் அதிகரிக்கிறது.

மேலும், ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளின் தற்போதைய அடிப்படை சம்பளம் 29,540 ரூபாய், இது இந்த வருடம் 44,293 ஆகவும், 2026இல் 46,921 ஆகவும், 2027இல் 49,550 ஆகவும் உயரும்.

தற்போது அடிப்படை சம்பளம் 29,540 ரூபாயாக இருக்கும் போது, 2027ஆம் ஆண்டில் அது 49,550 ரூபாயாக உயரும். அதேபோல் இதனுடன் தொடர்புடைய ஏனைய கொடுப்பனவுகளும் அதிகரிக்கும் என அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்திருந்தார்.

## தேங்காய் விலை குறைவடையும் சாத்தியம்!

*கொழும்பு, பெப் 28*

*தற்போது அதிகரித்துள்ள தேங்காய் விலையானது வைகாசி மாதத்துக்கு பின்னர் மீண்டும் பழைய விலைக்கு திரும்பும் என தேங்காய் மேம்பாட்டு ஆணை யத்தின் தலைவர் சாந்த ரணதுங்க தெரிவித்தார்.*

*தேங்காய் இறக்குமதிக் காக அனுமதி பெற்ற நிறுவன உரிமையாளர்கள் எதிர்வரும் சில தினங்களில் இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதால், 200-250 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படும் தேங்காய் விலை குறைவடைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.*







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.02.2025 இல் வெளியிடப்பெற்றது.